மாண்புமிகு திரு. எம். முத்துசாமி: (அ) திருச்சி வடக்கு மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் 20—3—1967 நாளில் நிறைவேற்றப்பட்ட குறிப்பிட்ட தீர்மானம் ஒன்றின் நகல் அரசின் பார்வைக்கு மாவட்ட ஆட்சியாளரால் 27--4--1970-ல் அனுப்பப்பட்டது.

(இ) தீர்மானத்தில் அடங்கிய கோரிக்கை வரைவு நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. ஆகையால் வசதியான காலம் வரும்வரை பொறுத்திருக்க வேண்டியதாக உள்ளது.

Co-operative Processing and Marketing Committee

* 29 *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Registrar of Co-operative Societies sent a proposal to Government on 20th January 1967 to extend the tenure of office of the High-level State Committee on Co-operative Marketing and Processing for a further period of one year from 11th February 1967;

(*b*) if so, the details thereof;

(*c*) whether the Joint Registrar of Consumers' Co-operative Societies corresponded with the Tamil Nadu Government on 3rd December 1969 regarding this;

(*d*) whether the extension of the tenure of office of this Committee has been deferred; and

(*e*) if so, the reasons therefor?

கோவாபரேடிவ மார்க்கட்டிங் பிராசெஸ்ஸிங் குழு

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினைக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோவாபரேட்டிவ் மார்க்கட்டிங் பிராசெஸ்ஸிங் சம்பந்தமாக உயர்தர மாநிலக் குழுவை 11--2--1967 முதல் மேலும் ஓராண்டு காலத்துக்கு செயல்படுத்துவது பற்றி 20--1--1967-ல் கூட்டுறவு மாநில பதிவாளர் அரசுக்குப் பிரேரணையொன்றை அனுப்பினரா?

(இ) ஆமெனில், விவரங்கள் யாவை?

(உ) இது பற்றி உபயோகிப்போர் கூட்டுறவு இணை பதிவாளர் 3--12--1969-ல் தமிழ்நாடு அரசுக்கு எழுதினரா?

(எ) அக்குழுவின் பதவி காலத்தை நீடிப்பதை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா?

(ஐ) ஆமெனில், அதற்கான காரணங்கள் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) & (இ) தலைவர் அவர்களே கூட்டுறவு விற்பனை நிலையங்கள் கொள்முதல் பணிகள் குறித்து ஆராயவும் ஆலோசனை கூறவும் உள்ள அந்தக் குழுவின் ஆயுட்காலத்தை நீடிக்கலாம் என்று கூட்டுறவுத்துறை பதிவாளர் பரிந்துரைத்தார்.

(உ) ஆம்.

(எ) ஆம்.

(ஐ) தற்போதைக்கு இக்குழுவை நீடிக்க வேண்டிய அவசியம் ஏதுமில்லை என்று அரசு கருதுகிறது.

26th August 1970]

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: சபாநாயகர் அவர்களே, மத்திய அரசு இத்தகைய காரியங்களைக் கூட்டுறவுகள் மேற்கொள்வதற்கு அனுகூலமாக, கார்ப்பரேஷன் முதலிய அமைப்புகளைக் கொண்டு அதற்கு ஆதரவளித்து முன்னேற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்போது, மாநில அளவில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஒரு குழு இருப்பதால், என்ன கஷ்டம்? அது தேவையில்லை என்று அரசாங்கம் கருதக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: நான் கூறியது, தற்போதைக்குத் தேவையில்லை என்று அரசு கருதுகிறது என்பதுதான். அரிசி ஆலைகள், அல்லது வேறு தொழிற்சாலைகள், அவைகளுக்காகத் தனிக் குழு தேவையா என்று அரசு ஆராய வேண்டியிருக்கிறது. ஆலைப் பணிகளுக்கும், விற்பனை வேலைக்கும் பல வேற்றுமைகள் இருப்பதால் ஒரே குழுவினால் எல்லா வற்றையும் கவனிக்க முடியுமா என்பது ஐயப்பாடாக இருக்கிறது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: கூட்டுறவு ஆலையில் உற்பத்தி செய்யும் பொருள்களைக் கூட்டுறவு விற்பனை சங்கம் மூலமாக விற்பனை செய்யவேண்டியது அவசியமாக இருப்பதால், இரண்டையும் ஒன்றாகக் கருதி அந்தக் குழு செயல்படுவதால் என்ன கஷ்டம் இருக்குமென்று அரசு கருது கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: ஆலைக்கும் விற்பனை நிலையங் களுக்கும் பெரிய வேறுபாடுகள் இருக்கின்றன. இரண்டும் செய்ய வேண்டிய பணிகள் தனித்தனியாக இருக்கின்றன. ஆகையால் இரண்டிற்கும் தனித் தனியாக குழு இருப்பது நல்லது அல்லவா? ஒரே குழுவைக்கொண்டு இரண்டு வேலைகளையும் செய்யச் சொன்னால், இரண்டும் நன்றாகச் செயல் படாமல் போகாதா என்று ஆராய வேண்டியது அவசியமாகிறது.

Co-operative Land Development Banks

* 30 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the number of Co-operative Land Development Banks registered in Tamil Nadu during 1969-70;

(*b*) the share capital collected by each of the banks; and

(*c*) the amount of share capital given by the Government to each of the banks?

கூட்டுறவு நிலவள வங்கிகள்

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டில் 1969-70-ஆம் ஆண்டில் பதிவான கூட்டுறவு நிலவள வங்கிகள் எத்தனை?

(இ) அந்த வங்கிகள் ஒவ்வொன்றும் சேர்த்த பங்கு மூலதனம் எவ்வளவு?

(உ) அவை ஒவ்வொன்றுக்கும் அரசு அளித்த பங்கு மூலதனம் எவ்வளவு?